இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - 2006
இறுதிப் பரீட்சை 2006 - மட்டம் 06
LWU 3326/4326 – தீங்கியல் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 03.05.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. வரையறையற்ற பரப்பு மற்றும் ஏற்படக்கூடிய பல் வேறுபட்ட நடைமுறை சூழ்நிலைகள் காரணமாக, எல்லா விதமான சாத்தியமான சூழ்நிலைகளுக்கேற்ற இறுக்கமான தரத்துடன் கூடிய நடத்தைகளை உருவாக்குவது கடினமானதும், பொருத்தமற்றதுமாகும். ஆகையால் கவலையீனம் தொடர்பான பொறுப்புடமையை தீர்மானிக்கின்ற சட்டமானது நெகிழக்கூடியதாகவும், பொதுக்கொள்கை தேவைகள் மற்றும் நியாயம் என்பவற்றுக்கு அமைய அச்சட்டத்தை பிரயோகிப்பதற்கு நீதிபதிகளுக்கு சுதந்திரம் கொடுக்கக்கூடிய வகையில் இருத்தல் அவசியமானதாகும்.

கவலையீனம் மீதான தீர்ப்புச்சட்டங்கள் இந்த இலக்கை அடைந்துள்ளதா அல்லது முரண்பாடானதும் குழப்பமானதுமான விதிகளை உருவாக்கியுள்ளதா?

ஆராய்க.

கொள்கைகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களை குறிப்பிட்டு உமது விடையை ஆதாரப்படுத்துக.

2. "கவலையீனமான ஒரே ஒரு செயல் ஒன்றில் இருந்து எதிர்பாராததும் முன்னறியக் கூடியதல்லாததான விளைவுகள் ஏற்படுகின்ற சூழ்நிலை ஒன்றில் எதிர்வாதி மீது, அவனுடைய பிழையின் விகிதாசாரத்தை விட கூடுதலாக பொறுப்புடமையை எதிர்வாதி மீது விதிப்பது நீதியற்றதாக தோன்றுகிறது. மறுவகையில் எதிர்வாதியை பொறுப்புடைமையில் இருந்து விடுதலை செய்தலானது குற்றமற்ற பாதிக்கப்பட்ட திறத்தவரை அவருக்கு ஏற்பட்ட இழப்பீட்டுக்கு நிவாரணமாக நட்டஈடு பெறுவதிலிருந்து அவரை தடுக்கின்றது".

Law of Delict Block 2, p 56

இக்குழப்பமான நிலையை தீர்ப்பதற்கு நீதிமன்றங்கள் எவ்வகையான முயற்சியை மேற்கொண்டுள்ளது என்பதை பகுப்பாய்வு செய்து இக்கூற்றை ஆராய்க. இவ்விடயம் தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ள விதிகள் பொருத்தமான சமநிலை ஒன்றை பேணுகின்றன என நீர் கருதுகிறீரா.

3. ராமா, கிருஸ்னா இருவரும் சேர்ந்து ஒன்றாக இரவு களியாட்ட விடுதி ஒன்றுக்கு சென்றனர். அவர்கள் இருவரும் அங்கு அதிகளவில் மது அருந்தினர் அதன் பின்பு, ராமா, கிருஸ்ணாவிடம் தான் தன்னுடைய மோட்டார் சைக்கிளில் விளையாட்டு துறை அமைச்சின் மைதானத்திற்கு சென்று அங்கு, முரளியுடன் சேர்த்து ஓடுவதாக குறிப்பிட்டான். முரளியும் அதிகளவில் மது அருந்தியிருந்ததான். ராமாவும், முரளியும்

மைதானத்தை சுற்றி ஓடிக் கொடிருந்த போது கிருஸ்ணா ராமாவுடைய மோட்டார் சைக்கிளின் பின்புறு ஆசனத்திலிருந்து சவாரி செய்தான். ராமாவுடைய சைக்கிள் கட்டுப்பாட்டை மீறி செல்ல கிருஸ்ணா அதில் இருந்து வீசியெறியப்பட்டான். அவன் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை. அவனுடைய தலையில் கடுமையான காயங்கள் ஏற்பட்டன. முரளி, கிருஸ்ணாவை வைத்தியசாலையில் சேர்ப்பதற்கு உதவி செய்தான். அதன் பின்பு கிருஸ்ணாவுக்கு ஏற்பட்ட காயங்களை கண்டதோடு, அவன் இறந்து விட்டான் என முரளி எண்ணினான். இதனை கண்ட முரளிக்கு கடுமையான மன பாதிப்பு ஏற்பட்டது.

கிருஸ்ணா, முரளி இருவரும் நட்டாடு பெற்றுக்கொள்ளும் பொருட்டு ராமாவுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தனர். ராமா, பங்கு கவலையீனம், இசைந்தது தீங்காகாது ஆகிய இரண்டு பாதுகாப்புகளையும் முற்போட விரும்புகிறான். அவனால் அவ்வாறு செய்ய இயலுமா என்பது தொடர்பில் ஆலோசனை வழங்குக.

4. (அ) ரொமேஸ் தன்னுடைய நான்கு வயது மகன் தினேஸ் உடன் சில மருந்துகளை வாங்குவதற்காக மருந்துகடை ஒன்றுக்கு சென்றான். மருந்தாளருடன் ரொமேஸ் கதைத்துக் கொண்டிருந்த போது, தினேஸ் கடையை சுற்றி நடந்தான். அவன் கடையில் இருந்த கவுண்டருக்கு கீழே சென்றான். அங்கு நிலத்திலே சில பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததை கண்டான். அவன் அப்பெட்டியில் ஒன்றை திறந்து அதில் இருந்த சில சீனி கலந்த மாத்திரைகளை விழுங்கினான். தினேஸ் இவ்வாறு செய்து கொண்டிருந்தமையை ரொமேஸ் கண்டான். அவன் தினேஸ் ஐ வெளியே கொண்டு வர கவுண்டருக்கு கீழே குனிந்தான்.அவன் குனிந்தபோது அங்கு கவுண்டரிலிருந்து கூர்மையான ஆணி ஒன்று தலையிலே குத்தி காயம் ஏற்படுத்தியது. ரொமேஸ் சத்திரசிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். சில மணித்தியாலங்களின் பின்பு, தினேஸ் அவன் விழுங்கிய மாத்திரைகளின் பாதிப்பு காரணமாக கோமா நிலைக்கு தள்ளப்பட்டான்.

ரொமேஸ், தினேஸ் ஆகியோர் தொடர்பாக மருந்தாளருக்குரிய பொறுப்புடைமையை ஆராய்க.

(ஆ) "நீதிமுறை மற்றும் சட்டவாக்க தலையீடுகளின் விளைவாக உரோமன் டச்சு சட்டம், ஆங்கில சட்டம் ஆகியவற்றின் கீழ் காணப்படும் அத்துமீறுவோர் தொடர்பாக இடம் கொள்வோர் ஒருவரின் பொறுப்புடைமையின் வேறுபாடு தெளிவற்றதாக வந்துள்ளது" .

அந்துமீறுவோர் தொடர்பாக இவ்விரண்டு சட்ட முறைமைகளின் கீழ் எடுக்கப்பட்டுள்ள அணுகுமுறைகளை விமரிசித்து மதிப்பிடுக.

5. (அ) 19 வயதுடைய ஜீவன், பிறந்த நாள் விழா ஒன்றுக்கு தனது பெண் நண்பி ஜானகியுடன் செல்வதற்காக தனது தந்தையிடம் காரை தருமாறு கேட்டான். ஜீவனுடைய கவலையீனமான வாகனசெலுத்துகை காரணமாக வழியிலே விபத்து ஒன்று ஏற்பட்டது. இதன் விளைவாக ஜானகி மிகவும மோசமாக காயமடைந்தாள். ஜானகியுடைய பெற்றோர் ஜீவனுடைய தந்தையிடம் நட்ட ஈடு கோரினர். எனினும் அவர் அதனை செலுத்த மறுத்தார். அவர்கள் தற்போது ஜீவனுடைய தந்தைக்கு எதிராக வழக்கு நடவடிக்கை ஒன்றை மேற் கொள்ள விரும்புகின்றனர்.

ஆராய்க.

(ஆ) நிமாலி, தோல் வருத்தம் ஒன்றக்கு பரிகாரம் பெற்றக்கொள்ளும் பொருட்டு கண்டியில் இருந்த நவயுகய என்ற தனியார் வைத்தியசாலைக்கு சென்றாள். அவ் வைத்தியசாலைக்கு வருகை தரும் தோல் வைத்திய நிபுணர் ஒருவர் நிமாலி தினந்தோறும் உட்கொள்ளுமாறு சில மருந்துகளை மருந்துச்சிட்டையில் எழுதிக் கொடுத்தார். நிமாலி வைத்தியசாலையில் இருந்த மருந்துக் கடையில் அம்மருந்துகளை வாங்கினாள். இந்த மருந்துக்கடை பேகேத் கடை லிமிட்டட்டினால் நடத்தப்பட்டு வருகிறது. பேகேத் கடை லிமிட்டட், நவயுக வைத்தியசாலை ஆகிய இரண்டுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் கீழ் பேகேத் கடை தமது மருந்தாளர்களை நவயுகய வைத்தியசாலையிலுள்ள அனைத்து மருந்துக்கடைகளையும் நடாத்துவதற்கு அனுப்பி வைத்துள்ளது.

வைத்தியருடைய தெளிவற்ற கையெழுத்தின் காரணமாக மருந்தாளர் நிமாலிக்கு பிழையான மருந்துகளை கொடுத்தார். இதன் விளைவாக நிமாலி கடுமையாக சுகயீனமுற்றாள். நவயுகய வைத்தியசாலையின் பொறுப்புடைமையை ஆராய்க.

6 நிரஞ்சன் Habitats for All என்ற அரசசார்பற்ற நிறுவனத்தின் தலைவராவர். சுனாமியின் பின்பு அவருடைய நிறுவனம் சுனாமியினால் அழிவு அடைந்த வீடுகளை மீள் நிர்மாணம் செய்வதற்கென பல கோடி ரூபாய்களை நிதியாக பெற்றுக் கொண்டது. அவர்கள் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலே வேலை செய்தனர்.

சனத், சுனாமி நிவரணங்களுக்காக பெறப்படுகின்ற பணம் எவ்வகையில் பயன்படுத்தப்பட்டு கணக்குகள் சமர்ப்பிக்கப்படுகின்றது என்பது தொடர்பில் புலனாய்வு செய்யும் ஒரு நிருபர் ஆவார். அவர் Shout Out பத்திரிகையில் வீடுகளை மீள் நிர்மாணம் செய்வதற்கு எவ்வாறு பணம் செலவிடப்படுகிறது என்பதை குறிப்பாக ஆராயும் தலைப்பின் கீழ் கட்டுரை ஒன்றை எழுதினான். அக் கட்டுரையிலே "கிழக்கு மாகாணத்திலே வேலை செய்து வருகின்ற நிறுவனம் ஒன்று பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக வீடுகளை மீள் நிர்மாணம் செய்வதற்கு பணத்தை செலவிட்டுள்ளது ஆனால் கடந்த சில மாதங்களாக "habitat" நிறுவனத்தின் தலைவர் நிறைய நன்மைகளை பெற்றுள்ளார் என்பதை பார்க்கும் போது மிகவும் சுவராசியமாக உள்ளது. அவரும் சுனாமியால் பாதிக்கப்பட்டவரா?" எனக் குறிப்பிட்டு சுனாமியை உடன்அடுத்து வந்த மாதத்தில் பாதிக்கப்பட்டவரகள் சார்பாக நன்மை கோரியவர்கள் கூடுதலான நன்மைகளை அடைந்துள்ளார்கள் என எழுதியிருந்தான்..

நிரஞ்சன் சனத்துக்கு எதிராக அவதூறு வழக்கு நடவடிக்கையை கொண்டு வர விரும்புகிறான். அவதூறு வழக்கு நடவடிக்கை கொண்டு வருவதற்கு அவசியமான விடயக்கூறுகள் இங்கு இருக்கின்றனவா. சனத்துக்கு ஏதேனும் பாதுகாப்புக்கள் உண்டா என்பதனையும் ஆராய்க.

7. "தனியார் தொல்லை தொடர்பான சட்டம் காணி ஒன்றின் பயன்பாடு மற்றும் அனுபவிப்பில் ஏற்படுகின்ற ஒரு பொருளளவானதும் நியாயமற்றதுமான தலையீடுகள் தொடர்பான நடவடிக்கையில் மட்டுமே தலையிடுகிறது'.

இங்கு கோடிட்டுள்ள சொற்களுக்கு விசேட கவனம் கொடுத்து தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் இக் கூற்றை விமர்சித்து ஆராய்க.

8. பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றினைப் பற்றி விரிவான பகுப்பாய்வு அறிக்கையொன்றை எழுதுக.

(அ) கவலையீனமான பிறழ்கூற்றுடன் தொடர்புபட்ட சட்டத்தின் "விசேட உறவு முறை" என்ற அம்சம்

(ஆ) res ipsa loquitur முதுரை.

(இ) Ryland v. Fletcher விதிக்கான பாதுகாப்புகள்.

(பதிப்புரிமைபெற்றது)